இதுவரை வியட்நாம் அகதிகள் 426 குடும்பங்கள் தமிழ் நாட்டிற்கு வந்துள்ளனர். இவர்களில் அநேக நபர்கள் வியாபார வர்க்கத்தினர்களாக உள்ளதால், 248 குடும்பங்களுக்கு 5·75 இலட்சம் ரூபாய் வியாபாரக்கடனாக வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரவர்கள் விளக்கமாகவும், விரிவாகவும் பதில் தந்திருக்கிறார்கள், ஆகவே அடுத்த கேள்வியை எடுத்துக் கொள்ளலாம். வினா எண். 39.

நெசவாளர் சேமிப்புத் திட்டம்.

*வினா எண் 39—திரு. சு. பழனிசாமி: மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் கூட்டுறவு சங்கங்களிலுள்ள நெசவாளர்கள் எத்தனை பேர் இதுவரை பயன் பெற்றுள்ளார்கள்.

(ஆ) இதற்கு மாற்றுத் திட்டம் ஏதும் உண்டா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜகதீசன் : (அ) நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் 614 கூட்டுறவு சங்கங்களில் 59,000 நெசவாளர்கள் சேர்ந்து பயன் பெற்று வருகின்றனர்.

(இ) இத்திட்டத்தை நெசவாளர்களுக்கு மேலும் அதிக பயனளிக்கும் வகையில் மாற்றங்கள் செய்வது பற்றி பரிசீலனையில் உள்ளது.

திரு. சு. பழனிசாமி: தலைவரவர்களே, மாற்றுத் திட்டம் உண்டு என்று அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தில் நெசவாளர்கள் மாதம் ஒரு ரூபாய் அல்லது இரண்டு ரூபாய் செலுத்தினால் அவர்கள் இறக்கும் தறுவாயில் 5,000 ரூபாய் கொடுக்க அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜகதீசன் : தலைவரவர்களே, அரசு உதவித் தொகையாக ஒரு ரூபாய்க்கு 3 பைசா வீதம் அளித்தால் ஆண்டு ஒன்றுக்கு இப்பொழுது 30 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஆனல் மாற்றுத் திட்டத்தின் அடிப்படையில், மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் செலுத்தும் நெசவாளர்கள் இறந்துவிட நேரிட்டால், அவரது நியமனதாரருக்கோ அல்லது சட்டப்படியான வழிமுறையினருக்கோ ரூபாய் 3000 கொடுக்கலாம் என்ற ஒரு திட்டத்தை இப்பொழுது அரசு பரிசீலனை செய்து வருகிறது.